


| 14.052026 | 'தெய்வ அன்பில்' பழகி வளருங்கள்! | 20வது வாரம் |
|---|---|---|



'அன்பே பிரதானமானது' என நாம் அறிந்திருக்கிறோம். தேவனை அன்புகூருவதும், பிறரை அன்புகூருவதும் ஆகிய இந்த அற்புத செயல் நம்மில் ஒருவருக்கும் தூரமானது அல்ல. அது ஏனென்றால், நம் எல்லோருக்கும் இருதயம் உள்ளது! இருதயம் இல்லாமல் ஒருவரும் வாழ இயலாது. அதுபோலவே, அன்பில்லாத இருதயமும் பிழைத்திருக்க இயலாது!

'உயிரைப் போன்று உள்ள அன்பை' நான் ஏன் நாடி வாஞ்சிக்க வேண்டும்? என ஒருவன் கேட்பது தகுதியான கேள்வி அல்ல. யாதொரு கேள்வியும் கேட்காமலே, பிறரிடம் அன்புகூர நாம் பழகுவோமாக. மெய்யான அன்பிற்கு முன்பாக 'காரணங்கள்' நிலை நிற்பதில்லை. நான் ஏன் அன்புகூர வேண்டும்? என்ற முட்டுக்கட்டை போடும் காரணங்கள் விலகி விட்டால், தேவ அன்பு நம்மை நிறைத்துவிடும்! இவ்வாறு மிக எளிய விதத்தில் அன்புகூர முயற்சித்துப் பாருங்கள். அப்பொழுது, ஒரு 'தத்துவ ஞானி' கூட அடைந்திட முடியாத மேன்மையை நீங்கள் அடைந்திடுவீர்கள்!

**- ரத்னம்**